நகல்

20.4.36. S.N.S. சுந்தரம்.

நகல் - 1

Registered letter.

Tinnavelly.
20-4-36.

2

பதிலனுப்பியது 30-4-36

பிரமஸ்ரீ மகா மகோபாத்தியாயர் தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களுக்கு.

Ref:- ஸ்ரீமான் மு. இராகவய்யங்கார் அவர்களின் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

இதன் சம்பந்தமான வாதத்தில் இரண்டு சூத்திரங்களின் பொருள் நிச்சயிக்கப் படவேண்டியதாயிற்று. அவை வருமாறு:

1. பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணமென்ப.

2. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமு முண்டே.

இவற்றுள் முதற் சூத்திரத்தில் ஐயர் என்ற சொல்லுக்கு மேலோர் என்பதே பொருள் என்று மிகுந்த வாதத்தின் பின்னரே இரு திறத்தாரும் முடிவு செய்துள்ளார்கள்.

~~இட~~

இரண்டாவது சூத்திரத்தில் மேலோர் மூவர் என்பதற்குப் பொருள் ஆரிய நூலிற் கூறப்படும், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் - என ஒரு திறத்தாரும், தொல்காப்பியத்துள் தமிழ் மரபினைக் கூறப்படும் பார்ப்பனர் (குருக்கள்) அரசர் வணிகர் - என்ற மூவரெனப் பிறிதோர் திறத்தாரும், குறிஞ்சி, முல்லை, மருதம் என்னு மூன்று நிலத்தில் வாழும் மக்கள் இனத்தாரென மற்றொரு திறத்தாரும் இன்னும் பிறவும் வாதித்துக் கொண்டிருப்ப.

வேறு சில அறிஞர் மேலோர் மூவர் - என்ற சூத்திரமே இடைச்செருகல் எனவும், இவ்வாறே "வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" முதலிய சில சூத்திரங்களும் இடைச்செருகல்கள் எனவும் அறுதியிட்டு உரைக்கின்றனர்.

ஆகவே மேற் கூறிய இரண்டு சூத்திரங்களின் பொருளைப் பற்றித் தங்களுடைய முடிவான அபிப்பிராயம் தமிழுலகத்துக்கு அத்தியாவசியமன்றோ?

நகல்

20.4.36. S.N.S. சுந்தரம்.

நகல் -1.

Tinnevelly
Page 2.

மேலும் பிரஸ்தாப ஆராய்ச்சியின் பயனாய் வரும் புலவர்க் கிளர்ச்சிக்கு அடிகோலுமித் தருணத்தில் தாங்கள், தங்கள் அபிப்பிராயம் யாதும் தெரிவியாமலிருப்பது வியப்புக்கிடமாக இருக்கிறது.

ஏனெனில் பழந்தமிழ்ச் சங்க நூல்களாகிய புறநானூறு, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலியவைகளையும் பண்டையப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தையும், பிற்காலப் பேரிலக்கண ~~மாகிய~~ இலக்கியங்களையும், நுண்ணிதின் ஆராய்ந்து தெளிந்து, பெரும் புலமை வாய்ந்தவரெனப் பேர் பெற்றிருத்தலோடு, அவற்றிற் பலவற்றை உயர் முறையில் அச்சு ஏற்றிப் புகழ் பெற்று விளங்குதலினாலேயும் இற்றைக் காலத் தமிழ்ப் பண்டிதர்களுக்கெல்லாம் தலைமையாகப் போற்றப் படுதலினாலேயும் தங்கள் அபிப்பிராயம் சிறந்த வழிகாட்டியாக உபய வாதிகளுக்கும் பயன்படு மன்றோ?

பெரும் பயன் விளைக்கக் கூடிய தங்கள் அபிப்பிராயத்தை இதுவரை வெளியிடாதிருந்தது பற்றியே இது எழுத நேர்ந்தது. இனியேனும் தங்கள் மதிப்புள்ள அபிப்பிராயத்தை வெளியிட்டுத் தமிழ் மக்களுக்கு உண்மை உணர்த்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நண்பன்
S.N.S. சுந்தரம்.

Address:- S.N.S. சுந்தரம்.
10. கலத்தி முடுக்குத் தெரு,
திருநெல்வேலி.

விடை:

ஐயா, தாங்கள் 20.4.36 அன்று எழுதியனுப்பிய கடிதம் பெற்றேன். எல்லாம் தெரிந்து கொண்டேன்.

விவாதத்திற்குக் காரணமாகிய விஷயங்களில் நான் எப்பொழுதுமே தலையிடுவதில்லை. ஆதலின் இந்த விஷயத்தில் என்னுடைய கருத்தை எதிர்பார்க்க வேண்டாம். என்னுடைய தேகநிலையும் மனநிலையும் இந்த விவாதத்தைப் பற்றி யோசிக்க இடங்கொடுக்கவில்லை. மன்னிக்க வேண்டும்,

இங்ஙனம்,

நகல்

திருநெல்வேலி.
20-4-36.

S. N.S. சுந்தரம்

pg 304 to 308.

தி. க. VOL 'Q'

Copied.

45.